பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆடி 12 (27—7—72) வியாழன் வெளியூர்: ஆடி 13 (28—7—72) வெள்ளி [இதழ்: 37

நஞ்சை நிலங்களில் புஞ்சைத் தானிய சாகுபடி

சென்னை, ஜூலை 27—

தமிழகத்தில் நஞ்சை நிலங்களில்--குறிப்பாக காவிரி கழிமுகப் பகுதியில் பயறு வகைகளை உற்பத்தி செய்யும் முன்னோட்டத் திட்டம் ஒன்றைத் தொடங்க தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

இத்திட்டத்தின்படி, சோயா பீன்சு--பச்சைப் பயிறு போன்ற குறுகிய காலப் பயிர்களை இப்பகுதியில் எப்படிச் சாகுபடி செய்தால் பயன்தரக்கூடும் என்று ஆராயப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

மத்திய--மாநில அரசு ஊழியர்களின் ஊதிய ஏற்றத்தாழ்வு

நீக்குவதற்கு மத்திய அரசு நிதியுதவ வேண்டும்

தென் மண்டலக் குழுவில் தமிழ்நாடு முதலமைச்சர் வற்புறுத்தல்

கலைஞரின் யோசனைக்கு இந்திரா காந்தி ஆதரவு

ஐதராபாத் ஜூலை 27—

"மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தையும்--விலைவாசிப் படியையும் மத்திய அரசு உயர்த்தும் ஒவ்வொரு தடவையும், மாநில அரசும் தனது ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது; இதுபோன்ற உயர்வுகளுக்கு, மாநில அரசின் நிதி நிலை இடம் தருவதில்லை, எனினும் மத்திய--மாநில ஊழியர்களுக்குள் ஊதிய வேறுபாடு இருப்பதும் நியாயம் அல்ல; எனவே, இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மாநில அரசு தனது ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித் தரும் சிரமத்தைச் சமாளிக்க மத்திய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்"

என்று, ஐதராபாத்தில் நடைபெற்ற தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டில், தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

தென் மண்டலக் குழுக் கூட்டங்கள்--கூடும் நிலை பற்றி கலைஞர் யோசனை

பின்னர், முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தென் மண்டலக் குழுக் கூட்டம் நடைபெறும் நிலை பற்றிச் சுட்டிக்காட்டிப் பேசியதாவது:—

"இந்த மாநாடு, நீண்ட இடைவேளைக்குப் பிறகு--இரண்டரை ஆண்டுகளுக்கு பிறகு--கூடுகிறது; முக்கியத் திட்டங்களை தீட்டுவதிலும்--அவைகளைச் செயல்படுத்துவதிலும் இத்தகைய மாநாடு பயனுள்ளதாக அமையும்.

இந்த மாநாடு 6 மாதத்துக்கு ஒரு முறை கூடவேண்டுமென்ற விதி இருக்கிறது; எனவே, இந்த மாநாட்டை--தவறாமல் 6 மாதத்துக்கு ஒரு தடவை கூட்ட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாநாடுகளால், தென் மாநில அரசுகளும்--மத்திய அரசும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள இயலும்.

இந்த மாநாட்டில் எடுக்கும் முடிவுகளைச் செயல்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்; இப்படிச் செய்தால், 'தென் மாநிலக் கவுன்சில்', சிறந்த--பயனுள்ள அமைப்பாக விளங்கும்."

[இவ்வாறு, முதலமைச்சர் கலைஞர் கூறியபோது, தலைமையமைச்சர் இந்திரா காந்தி குறுக்கிட்டு, 'தமிழக முதலமைச்சர் சொல்லும் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்; இந்த மாநாட்டை 6 திங்களுக்கு ஒரு தடவை கூட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.]

மின்சார 'கிரிட்' அமைப்பு

மேலும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தென் மாநிலங்களுக்குப் பொதுவான மின்சார சேமிப்பு ('கிரிட்' அமைப்பு)த் திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும்; அதாவது, தமிழ்நாடு--கேரளம்--மைசூர்--ஆந்திரம் ஆகிய 4 மாநிலங்களிலும் உற்பத்தியாகும் மின்சாரத்தை ஒரே நிறுவனத்தின் கீழ் திரட்டவேண்டும்; பிறகு, அந்தந்த மாநிலத்துக்குத் தேவையான மின்சாரத்தைச் 'சப்ளை' செய்யவேண்டும்; இப்படிச் செய்தால், தென் மாநிலத்தில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படும் சிரமம் நீங்கும்; இந்த 4 மாநிலங்களுக்கும் தேவையான அளவு மின்சாரம் கிடைக்கும்.

[இந்தக் கருத்தைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும்--மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கே. எல். ராவும் ஆதரித்தனர்]

ஊதியவேறுபாடுகளைக் களைவது அவசியம்

மாநில அரசு ஊழியர்களுக்கும்--மத்திய அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்படும் ஊதியம்--அலவன்சு ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளை நீக்கவேண்டும்; இரு தரப்பு ஊழியர்களுக்கும் ஒரே மாதிரி ஊதியம் தரப்படவேண்டும்; இந்தக் கருத்தைப் பல மாநிலங்களும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கின்றன."

மின்சார வாரியத்துக்கு ரூ. 1.10 கோடி இழப்பு

விவசாயிகள் சங்கத்துடன் உடன்பாடு ஏற்பட்டதன் விளைவு

சென்னை, ஜூலை 27—

"வேளாண்மைப் பணிகளுக்காக மின்சாரக் கட்டணத்திற்குச் சலுகை அளிப்பது குறித்துத் தமிழக அரசுக்கும்--மானிய விவசாயிகள் சங்கச் செயற் குழுவினருக்குக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து மின்சார வாரியத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக வருவாய் இழப்பு ஏற்படும்"

என்ற தகவலை, மின்சார வாரியத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"ஏற்கனவே திருத்தியமைக்கப்பட்ட மாறுதல் கட்டண விகிதப்படி மின்வாரியத்திற்கு விவசாயத் துறையிலிருந்து ரூ. 15.60 கோடி வருமானம் வரும் என்று கணக்கிட்டு எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் சென்ற வாரம் முதலமைச்சருக்கும்--விவசாயிகள் சங்கத்தினருக்குமிடையே ஏற்பட்ட சமரச உடன்பாட்டின்படி, இப்போது ரூ. 14.50 கோடி மட்டுமே வருமானம் வரும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்த ஒப்பந்தப்படி, விவசாயப் பணிகளுக்கான மின்சாரக் கட்டணம், முதல் நூறு யூனிட்டுக்கு யூனிட் ஒன்றுக்கு 12 காசு என்றும், அதற்குப் பிறகு ஒவ்வொரு யூனிட்டுக்கும் 11 காசு என்றும் முடிவு செய்யப்பட்டது; இந்தப் புதிய கட்டண விகிதப்படி மின்சார வாரியத்திற்கு ரூ. 1.10 கோடி வருமான இழப்பு ஏற்படும்."

ஒதுக்கிய பணம் செலவு செய்யப்படவில்லை

காலதாமதத்தால் வீண் விரயம்

உ. பி. அரசு நிர்வாகத்தில் அலங்கோலம்--மதிப்பீட்டுக் குழு கண்டனம்

லக்னோ, ஜூலை 27—

"உத்தரப் பிரதேச அரசு, தனது பல துறைகளுக்கும் நிதி ஒதுக்கி மதிப்பீடு செய்திருப்பது நம்ப முடியாத அளவுக்கு இருக்கிறது"

என்று உ. பி. சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு கருத்தறிவித்திருக்கிறது.

இந்தச் செலவு மதிப்பீட்டுக்கான புள்ளி விவரங்களைத் தருவதில் சம்பந்தப்பட்ட துறைகள் தவறியிருப்பதற்குக் குழு கண்டனம் தெரிவித்திருக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் ஒதுக்கப்பட்ட பணம் செலவு செய்யப்படாமல் திருப்பியளிக்கப்பட்டிருப்பதையும் குழு சுட்டிக்காட்டியது.

இராம் கங்கா நீர் மின் திட்டம் 1968—69-லேயே முற்றுப் பெற்றிருக்க வேண்டுமென்றும், ஆனால் அது மேலும் 6 ஆண்டுகள் தாமதப்பட்டிருக்கிறது என்றும் குழு கூறியது.

"இந்தத் தாமதத்தால் ஊதியம்--விலைவாசி ஆகியவை உயர்ந்துள்ளதை யொட்டி, திட்டச் செலவு மிகவும் கூடிவிட்டது" என்றும் குழு தெரிவித்தது.

ஒரு துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றொரு துறைக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் அது எடுத்துக் காட்டியது.

புதிய வரவு--செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யும்போது அதிக அல்லது குறைவான செலவுகளுக்கான காரணத்தை விளக்க வேண்டுமென்றும், நிதியமைச்சரை, குழு கேட்டுக் கொண்டிருக்கிறது.

பாங்கியில் பணம் சேமிப்பு

கேரளப் பெண்களின் முன்னுதாரணம்

பம்பாய், ஜூலை 27—

"கேரளத்தில் கிராமப் பகுதிகளில் பெண்கள் வேலை செய்து சம்பாதிக்கும் பணத்தில் பாதியைத்தான் கையில் பெற்றுக் கொள்கின்றனர்; மீதிப் பணத்தை அவர்கள் பாங்கியில் டிபாசிட் செய்து விடுகின்றனர்"

என்று புகழ் பெற்ற பொருளாதார நிபுணரான கே. என். ராஜ் கூறினார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"இந்தப் பணத்துக்கு $12\frac{1}{2}$ சதவிகித வட்டி தரப்படுகிறது; எந்த நெருக்கடியிலும் அவர்களின் கணவர்கள் அப்பணத்தை எடுத்துக்கொள்ள அவர்கள் அனுமதிப்பதில்லை."

குசராத்தில் ஆசிரியர்போராட்டம்

இந்திரா கட்சி ஆட்சியின் 'அணுகுமுறை'யால் 3,000 ஆசிரியர்கள் கைது

காந்திநகர், ஜூலை 27—

குசராத் கல்லூரிகள்--செகண்டரி பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 3,000 ஆசிரியர்கள் நேற்று இங்கு கைது செய்யப்பட்டனர்.

"எல்லாத் தனியார் செகண்டரி பள்ளிகளையும் மேற்கொள்ளக் கூடிய சட்டபூர்வ கார்ப்பரேஷன் என்று அமைக்கப்படவேண்டும்--எல்லா தனியார் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள வேண்டும்--என்று கோரி ஆசிரியர்கள் சட்டமன்றப் பகுதியை நோக்கி ஊர்வலமாக வந்தனர்.

அளவோடு பெறாத பெற்றோருக்கு தண்டனை

சிங்கப்பூர் அரசு எச்சரிக்கை

சிங்கப்பூர், ஜூலை 27—

"தங்களால் வளர்க்க முடியாத அளவுக்குக் குழந்தைகளைப் பெறும் 'பொறுப்பில்லாத பெற்றோர்'களைத் தண்டிக்க வேண்டியிருக்கும்" என்று சிங்கப்பூர் அரசு எச்சரித்திருக்கிறது.

"எப்பாடுபட்டாவது பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று அரசு உறுதி கொண்டிருக்கிறது; குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் ஒரு நெருக்கடியான கட்டத்தை நாம் இப்போது அடைந்திருக்கிறோம்; இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்குவதில் உடனடியாக முனையாவிட்டால், இது வரை செய்ததெல்லாம் வீணாகிவிடும்" என்று சிங்கப்பூர் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கூறினார்.

"1970-ம் ஆண்டைவிட 1971-ல் பிறப்பு விகிதம் அதிகரித்திருக்கிறது" என்ற புள்ளிவிவர வெளியீட்டைப் பார்த்ததும் அமைச்சர் கொதித்தெழுந்து இப்படிப் பேசினார்.

1970-ல் ஆயிரத்துக்கு 22.1 வீதமும் 1971-ல் 22.3 வீதமும் மக்கள் தொகை பெருகியிருப்பதாக அந்த வெளியீட்டில் காணப்பட்டது.

மகளிருக்கும் வேளாண்மைக் கல்வி

புதுவை மாநிலத்தில் பயிற்சி முகாம்கள்

காரைக்கால், ஜூலை 27—

புதுவை மாநிலத்தில் காரைக்கால் பகுதியில் மகளிருக்கு வேளாண்மைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாநில வேளாண்மைத்துறை இந்தப் பயிற்சியை அளிக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

சமுதாய மறுமலர்ச்சிக்குத் தந்தை பெரியார் ஆற்றிய பணி

பெரியார் வழிவந்த அண்ணா—கலைஞர் ஆட்சியில் தமிழகம் பெற்ற நற்பலன்

அ. இ. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் அமைச்சர் க. இராசாராம் பெருமித அறிவிப்பு

புதுடில்லி, சூலை 27—

புதுடில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தமிழகப் பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் ஆற்றிய உரையில் தந்தை பெரியார்—பேரறிஞர் அண்ணா—கலைஞர் ஆகியோரின் அரும் பணிகளால் சமுதாயத் துறையில் தமிழகம் பெற்றுள்ள முன்னேற்றத்தை எடுத்துரைத்தார்; அவர் இத்தொடர்பில் கூறியதாவது:—

"ஒடுக்கப்பட்டு—பிற்பட்டுக் கிடக்கும் மக்களை கைதூக்கி விடுவதே புதிய இந்திய சமூக சனநாயகத்தின் சாரமாகும்; இப்பணியில் ஒரு பாதி—பொருளாதாரப் பணி; மற்றொரு பாதி—அரசியல் பணியாகும்.

மக்களிடையே சமத்துவத்தை உருவாக்க—நடந்த இந்த இயக்கத்தில், பல பெரியவர்கள்—இராசாராம் மோகன் ராய் உள்ளிட்ட பலர்—சமுதாய உணர்வை ஊட்டிடப் பெரும் பாடுபட்டிருக்கின்றனர்; ஆனால், பலன் கணிசமானதாக இல்லை!

பெரியார் இராமசாமியின் மகத்தான—தனித்தன்மை வாய்ந்த பணியையும், அதன் விளைவாக எங்கள் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பெரியமாற்றத்தினையும் இம்மாநாட்டினரின் கவனத்துக்குக் கொண்டு வராவிடில் நான் கடமை தவறியவனாவேன்.

சமூக ஏற்றத் தாழ்வு என்பது, அரிசனங்கள்—அரிஜனங்கள் அல்லாதார் என்ற அளவுடன் நின்றுவிடவில்லை; சாதி இந்துக்கள் மத்தியிலும், 'ஒன்றையொன்று உயர்ந்தவை' என்று கூறிக் கொள்கின்ற பல நூறு பிரிவுகள் இருக்கின்றன.

'மனிதனுக்கு மனிதன் சமம்' என்பதை நிலைநிறுத்த—கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் உள்ள இந்த ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் சுயநல மனிதர்களால் உருவாக்கப்பட்டவையேயாகும்.

'இவை ஒழிக்கப்படவேண்டும்' என்று கூறி—ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக் காலத்துக்கு முன் பெரியார் இராமசாமி அவர்கள் துணிவோடு குரலெழுப்பி முன் வந்தார்.

சமூக விழிப்புணர்வு ஏற்படப் பெரியாரும்—அவருடைய ஆர்வம் மிக்க தோழர்களுமே காரணம்; அத்தோழர்களில், எங்கள் மாநிலத்து முதல்வராக இருந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களும்—தற்போதைய முதல்வராகக் கலைஞர் அவர்களும் முக்கியமானவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள், பெரியாரின் முதல் தளபதியாவார்; அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதும், தமிழ்நாட்டில் சாதி வேறுபாடற்ற—வர்க்கப் பேதமற்ற—சமத்துவ சமுதாயம் அமைக்கின்ற பணியில் ஈடுபட்டார்!

'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்ற கோட்பாட்டை உருவாக்கியவர் அண்ணா அவர்களாவார்!

கலப்பு மணம் செய்துகொள்பவர்களுக்குத் தங்கப் பதக்கம் அளிக்கவும்—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக நிலம் அளிக்கவும் அண்ணா அவர்கள் திட்டம் வகுத்தார்கள்.

இன்னும் இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் சமுதாயத்தை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

"இந்துக் கோயில்களில் எந்தச் சாதியினராயினும் அர்ச்சகர் பணியில் ஈடுபடலாம்—அறநிலையத்தலைவராகலாம்" என்று சட்டபூர்வமாக்கப்பட்டுள்ள மிகச் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று!

இந்தப் பின்னணியில் வைத்துத் தமிழக அரசின் நடவடிக்கைகளைப் பார்ப்பவர்கள், சமுதாயச் சீர்திருத்தப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைத் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்!

பிற்பட்ட வகுப்பினரின் நன்மைகளைப் பாதுகாக்கத் தமிழ்நாடு ஒன்றில் மட்டும்தான் தனி அமைச்சுத்துறை உள்ளது என்பதை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பிற்பட்ட வகுப்பினரின் நன்மைகளைப் பேணும் பணியில் எங்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிகப்பெரும் ஈடுபாடு உள்ளவர்.

'பிற்பட்டோர் நலக் குழு ஒன்று எங்கள் முதலமைச்சரால் அண்மையில் நியமிக்கப்பட்டது; அக்குழுவின் பரிந்துரைகளை முடிந்த மட்டும் நாங்கள் செயலாக்கி வருகிறோம்."

ஆந்திரச் சட்ட மன்றத்தில் மொழிப் பிரச்சினை

அமைச்சர்-உறுப்பினரிடை வாக்குவாதம்

அவைத் தலைவர் குறுக்கிட்டு அமைதிப்படுத்தினார்

ஐதராபாத், சூலை 26—

ஆந்திரச் சட்டமன்றத்தில் ஆங்கிலத்தில் பேசிய அமைச்சருக்கும்—தெலுங்கில் மட்டுமே பேசிய உறுப்பினருக்கும் இடையே வாக்குவாதம் நடந்தது.

அந்த அமைச்சர் தெலிங்கானாப் பகுதியைச் சேர்ந்தவர்; உறுப்பினரோ ஆந்திரப் பகுதியைச் சேர்ந்தவர்.

கேள்வி நேரத்தின்போது ஒரு கேள்விக்கு ஆந்திர உள்ளாட்சித் துறை அமைச்சர் மாணிக்கராவ் ஆங்கிலத்தில் பதிலளித்தார்; அவருக்குத் தெலுங்கு சரியாகப் பேசத் தெரியாததே இதற்குக் காரணமாகும்.

அவர் ஆங்கிலத்தில் பேசியது சி. வி. கே. ராவ் என்னும் உறுப்பினருக்குப் புரியவில்லை; 'இந்த அமைச்சர் சீமையிலிருந்து வந்தாரா—என்ன?' என்று அந்த உறுப்பினர் கேட்டார்.

உடனே அமைச்சருக்குக் கோபம் வந்துவிட்டது; 'நானும் ஆந்திர மாநிலக் குடிமகன்தான்; ஐதராபாத்—தெலிங்கானா பகுதியைச் சேர்ந்தவன்' என்றார்; 'இந்த உறுப்பினர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்மீது பாயப் பார்க்கிறார்; எனக்கும் அவரிடம் அந்த விதத்தில் நடந்துகொள்ளத் தெரியும்' என்று குறிப்பிட்டார்.

இதற்குள் புதிய காங்கிரசு உறுப்பினர் கொண்டா இலட்சுமண பாபுஜி குறுக்கிட்டு அமைதிப்படுத்தினார்; 'தெலுங்கில் பேசவராத தெலிங்கானா உறுப்பினர்களிடம் ஆந்திர உறுப்பினர்கள் பொறுமையாகவே நடந்துகொள்ள வேண்டும்; எல்லோராலும் எல்லா நேரத்திலும் தெலுங்கில் நன்றாகப் பேச முடியாது; எனவே, ஆந்திர உறுப்பினர்கள் இதனால் ஆத்திரம் அடையக்கூடாது' என்று அவர் சொன்னார்.

"தெலிங்கானாவைச் சேர்ந்தவர்களாலும் நன்றாகத் தெலுங்கு பேச முடியும்; ஆனால் இப்போது இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவேண்டாம்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று அவைத் தலைவர் பி. ரங்கா ரெட்டி கூறி—இந்த விவாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தார்.

துவக்கத்தில் அமைச்சர் ஆங்கிலத்தில் சொன்ன பதிலை, அவைத் தலைவரே தெலுங்கில் மொழி பெயர்த்து உறுப்பினருக்குச் சொன்னார்.

'மன்னர் மானிய ஒழிப்பு' வீரர்களா இவர்கள்?

இடித்துரைக்கிறார்—முன்னாள் மைசூர் முதலமைச்சர்

மைசூர் மன்னருக்குச் சாதகமாக மத்திய—மாநில அரசுகளின் சதி?

ஊட்டி, சூலை 26—

"மன்னர்களை ஒழித்துவிட்டோம்—மன்னர் மானியத்தை ரத்து செய்துவிட்டோம்" என்று பெருமை பேசிக்கொள்ளும் இந்திரா காங்கிரசுக் கட்சியினர், மைசூர் மாநிலத்தில் மக்கள் நலனுக்கு எதிராகவும்—முன்னாள் மன்னருக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வருவதை முன்னாள் மைசூர் முதல்வர் வீரேந்திர பாட்டீல் அம்பலமாக்கியுள்ளார்.

"மத்திய அரசும்—மாநில அரசும் கூட்டாகச் சேர்ந்து சதி புரிந்து, முன்னாள் மன்னருக்கு உதவியும்—சலுகையும் தர முற்பட்டுள்ளன; இது மாநிலத்திற்கும், மக்கள் நலனுக்கும் கேடு விளைவிக்கக்கூடியது" என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:—

"மன்னர் மானிய ஒழிப்புக்கான சட்டப்படி, முன்னாள் மைசூர் மன்னருக்குச் சொந்தமான மூன்று அரண்மனைகள் மீதான சொத்துரிமை மாநில அரசுக்கு உரியது; இதை எவ்விதச் சட்டத்தாலும் மாற்ற முடியாத நிலை இருந்தது; முந்திய மாநில அரசும், மாநில நலன் கருதியே இவை குறித்து முடிவும் எடுத்திருந்தன.

தற்போது மத்திய அரசும்—மாநில அரசும் கூட்டாகச் சேர்ந்து சதி வேலை மூலம், நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் குறுக்கு வழியைத் தேட முற்பட்டுள்ளன; இது, சட்டத்திற்கும் புறம்பான செயலாகும்; மத்திய அரசுக்குக் கூட இதில் எவ்வித அதிகாரமும் இனிமேல் கிடையாது.

முன்னாள் மன்னரின் மூன்று அரண்மனைகளும் அரசுடைமையாக்கப்பட்டுவிட்டன; 'அவை, அரசுடைமை' என அறிவிப்பதுதான் சரியான முறை; இதைத் தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இது மக்களுக்கு விரோதமான நடவடிக்கை ஆகும்."

முன்னாள் மன்னரிடம் இந்திரா காங்கிரசு முதல்வர் காட்டும் பரிவு

இந்தூர் மன்னருக்கு ரூ. 50-இலட்சம் ஆண்டுப் படியாம்

மனிதாபிமான அடிப்படையில் தொடர்ந்து கொடுக்க வேண்டுமாம்

போபால், சூலை 26—

"இந்தூர் சமஸ்தானத்தின் முன்னாள் மன்னர் துகோஜி, இப்போது நல்ல நிலையில் இல்லை; சிரமமான நிலையில் வாழ்க்கை நடத்துகிறார்; எனவே, அவருக்குரிய ஆண்டுப் படித் தொகையான ரூ. 50 இலட்சத்தை—மனிதாபிமான அடிப்படையில்—தொடர்ந்து தரவேண்டும்" என்று மத்தியப் பிரதேச சட்டமன்றத்தில் முதலமைச்சர் பி. சி. சேத்தி கேட்டுக் கொண்டார்.

கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் அளித்த பதிலில் அவர் கூறியிருப்பதாவது:—

"முன்னாள் மன்னரின் உறவினர்களுக்குத் தரப்படும் படி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5-இலட்சம்முதல் ரூ. 6-இலட்சம் வரையில் இருக்கிறது.

மன்னரின் உறவினர்கள் பலர், மாதாந்தரப் படி என்பதாக ரூ. 1.50—ரூ. 3 என்று குறைந்த அளவில் படி பெற்று வருகின்றனர்; மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டபோது இந்தப் படிகள் ஒழிக்கப்படவில்லை.

மன்னரின் உறவினர்களில் 380 பேர் ஆண்டுப் படி பெறுகின்றனர்; 113 பேர் மாதாந்தரப் படி பெறுகின்றனர்."

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாடு

500 மாட்டுவண்டிகளில் தோழர்கள் வருகை

"ஆகஸ்டுத் திங்கள் 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. கழக 5-வது மாநாட்டிற்குத் தமிழகமெங்கும் திரள்திரளாகக் கழகத் தோழர்கள் பஸ்களிலும்—லாரிகளிலும் வந்து கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியப் பகுதியைச் சார்ந்த தோழர்கள் அக்கினிராசு, காவேரிமணியன் எம். எல். ஏ. ஆகியோர் தலைமையில் 500 மாட்டு வண்டிகள் ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

என்று வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். முத்து எம். எல். சி. அறிவிக்கிறார்.

★

தொழிலாளத் தோழர்களின் பங்கு

"திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளத் தோழர்கள், மதுரை மாநாட்டில் கலந்துகொள்வதற்குத் தீவிர ஏற்பாட்டினை செய்திருப்பதாக மாநாட்டு அலுவலகத்திற்கு ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

மதுரை தி. மு. க. தோழர்கள், இரவு-பகல் எனப் பாராது மாநாடு அலுவல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"மாநாட்டு ஊர்வலத்தில் மஞ்சாலைத் தொழிற் சங்கச் சார்பில் பத்து லாரி டிரக்குகளில் அலங்காரத்துடன் கொள்கை விளக்கம்—கேளிக்கைச் சித்திரங்கள் மூலமாகவும், இலட்சிய முழக்க அறிவிப்பின் மூலமாகவும் கலந்துகொள்ளத் தொழிற் சங்கத் தொண்டர் படைத் தலைவர் இரா. பாண்டியன் ஊர்வல நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிச் செல்லவிருக்கிறார்"

என்று மதுரை ஆலைக் கிளைத் தொழிற் சங்கச் செயலாளர் திரு. என். பெருமாள் அறிவிக்கிறார்.

மதுரை மாநாடு

வளைவு அமைப்போர் கவனத்துக்கு:

"மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு ஊர்வலம் வரும் வீதிகள் அனைத்திலும் அலங்கார வளைவுகள் அமைக்கும் கழகத் தோழர்கள், அந்தந்த இடங்களை முன்கூட்டியே மாநாட்டு அலுவலகத்திற்குத் தெரிவித்துப் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

'வளைவுகள் அனைத்தும் ஊர்வலம் வரும் பகுதிகளில் இடைஞ்சலின்றி இருப்பதற்காக 18 அடி உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்"

என்று வரவேற்புக் குழுத் தலைவர் திரு. எஸ். முத்து அவர்கள் அறிவிக்கிறார்.

பழைய மன்னருக்குப் பாதுகாப்பாக இந்திரா காங்கிரசு ஆட்சி

நிஜாம் அரண்மனையை வாங்கும் மர்மம் என்ன?

ஐதராபாத், சூலை 26—

'மன்னர் மானியம் ஒழிப்பு—நகர்ப்புறச் சொத்து வரம்பு ஆகியவைகளை மீறி—இவைகளில் மக்களுக்குள்ள நம்பிக்கையைத் தகர்த்தெறியும் வகையில்—நகர்ப்புறச் சொத்து உச்சவரம்புச் சட்டம் வருவதற்குள் ஐதராபாத் முன்னாள் மன்னர் நிஜாமின் அரண்மனையை ரூ. 40 இலட்சம் கொடுத்து விலைக்கு வாங்கி மறைமுகமாக அவருக்கு உதவி செய்ய ஆந்திர மாநில இந்திரா காங்கிரசு அரசு திட்டமிட்டிருக்கிறது"

என்று ஆந்திர சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட்டாகக் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

'ஐதராபாத்தில் நிஜாம் மன்னருக்குச் சொந்தமாக உள்ள அரண்மனையை ரூ 40 இலட்சத்துக்கு விலைக்கு வாங்கிவிட மாநில இந்திரா காங்கிரசு அரசு முயற்சி செய்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது" என்று அவர்கள் தங்கள் புகாரில் கூறியுள்ளனர்.

'நகர்ப்புறச் சொத்துக்களை விற்கவோ—விலைக்கு வாங்கவோ கூடாது என்று அண்மையில் மாநில அரசு ஓர் அவசரச் சட்டத்தினை பிறப்பித்திருந்தது; இதனை மீறுவதாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது" என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

"மேலும், 'நகர்ப்புறச் சொத்துக்களுக்கு வரம்பு நிர்ணயிக்கப்படும்' என்று கூறப்பட்ட கொள்கை முழக்கமும் காற்றிலே பறக்கிறது; இந்த நிலையில், நிஜாமின் அரண்மனையை அரசு விலைக்கு வாங்கியிருப்பது நல்லதல்ல—அநீதியான செயலாகும்" என்றும் எதிர்க் கட்சித் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

"நகர்ப்புறச் சொத்து வரம்புச் சட்டம் விரைவில் வரவிருக்கிறது; இந்தச் சமயத்தில் இவ்வாறு நிஜாமின் அரண்மனையை ரூ. 40 இலட்சத்திற்கு வாங்க இருப்பது உள்நோக்கம் கொண்டதாகவே தெரிகிறது" என்றும் அவர்கள் புகார் கூறியுள்ளனர்.

"பணமில்லாத நிலையிலும் ஆந்திர வீட்டு வசதி வாரியம் இதற்கு ரூ. 40 இலட்சம் கொடுத்து விலைக்கு வாங்க இருக்கிறது; இது சரியல்ல" என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

★★

மதுரை மாவட்ட

தி. மு. கழக 5-வது மாநாடு

1972 ஆகஸ்டு 5, 6 (சனி—ஞாயிறு) ஆகிய நாட்களில்

மதுரை பந்தயத் திடலில்—வி. எஸ். எஸ். மணி பந்தலில்—நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அரங்கத்தில் நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:	அண்ணா படத் திறப்பாளர்:
முரசொலி மாறன் எம்.பி.	எல். கணேசன் எம்.எல்.ஏ.	பி. கே. மூக்கையா தேவர் எம்.பி.

கழகத் தலைவர் — பொதுச்செயலாளர் — பொருளாளர்—புரட்சிநடிகர்

டாக்டர் கலைஞர்—டாக்டர் நாவலர்—எம். ஜி. ஆர்.

மற்றும் அமைச்சர்கள்—நாடாளுமன்ற—சட்டமன்ற—உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள்—கழக முன்னணியினர் கலந்துகொள்வர்

ஆக. 5-ம் நாள் இரவு 10-மணிக்கு	ஆக. 6-ம் நாள் இரவு 10-மணிக்கு
டாக்டர் கலைஞர் எழுதிய சிவகங்கை சேதுராசன், இராமாராவ் நடிக்கும் 'உன்னைத்தான் தம்பீ' (கழகப் பிரச்சார நாடகம்)	முரசொலி அடியார் முஜிபுர் ரகிமானாக நடிக்கும் 'தங்க வங்கம்' (மாநில சுயாட்சிக் குரல் எழுப்பிய வங்காளத் தலைவரின் வரலாற்று நாடகம்)

இரு நாட்களுக்கும் சேர்த்துக் கட்டணம்: ரூ. 10; 5; 2. — — பெண்களுக்கு ரூ. 1.

4—8—72 அன்று மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

வரவேற்புக் குழுத் தலைவர்:	செயலாளர்கள்:	பொருளாளர்:	தொண்டர் படைத் தலைவர்கள்:
எஸ். முத்து எம்.எல்.சி.	பி. எஸ் மணியன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி எம்.எல்.ஏ. காவேரி மணியம் எம்.எல்.ஏ.	வெங்கிடசாமி	பொன் முத்துலிங்கம், மு. காதர்சா திருமதி தேவகி பாண்டியன் எம்.சி. ஏ வி. இராசு பொ. இராமச்சந்திரன்

★★

இயற்கையின் கோர விளைவுகளை முன்கூட்டியே அறியக் கருவி

உலக அளவில் அமைப்பை உருவாக்க வேண்டுகோள்

"புயல்—பெருமழை—வெள்ளம்—நிலநடுக்கம்—கடலில் அலைகள் பொங்குதல் போன்ற இயற்கை உற்பாதங்கள் பற்றி மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்ய உலக அளவில் ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்"

என்று ஐ. நா. சுகாதார சூழ்நிலை மாநாடு பரிந்துரை செய்தது.

ஏற்கனவே உள்ள பல நிறுவனங்களை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், எனவே இந்தப் புதிய அமைப்பை ஏற்படுத்த நிறைய நிதி தேவைப்படாது என்றும் மாநாட்டுக்கு வந்துள்ள அமெரிக்கக் குழுவினைச் சேர்ந்த ஜார்ஜ் மக்டொனல்ட் கூறினார்.

உலக வானிலை நிறுவனம்—உலக பருவநிலை கடிகாரம்—கடலில் அலைகள் பொங்குவது பற்றிய அனைத்து நாட்டு எச்சரிக்கை முறை—புயல் தகவல் அறிவிப்பு நிறுவனங்கள் முதலியவற்றை இந்தப் புதிய அமைப்புக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இயற்கை உற்பாதங்கள் பற்றிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கும்—எச்சரிக்கை முறைகளுக்கும் முன்னுரிமை தருமாறு உலக நாடுகளைக் கேட்டுக் கொள்ளும்படி ஐ. நா. பொதுச்செயலாளருக்கு மாநாடு சிபாரிசு செய்தது.

உலக அளவில் ஓர் அமைப்பை ஏற்படுத்துவதன் விளைவாக உயிர்ச் சேதம்—பொருட்சேதம் ஆகியவைகளை இயன்ற அளவில் குறைக்கலாம் எனக் கருதப்படுகிறது.

காற்று—நீர் ஆகியவற்றில் நச்சுக் கலப்புப் பற்றி எச்சரிக்கை தருவதற்கான முறைக்கு உலகச் சுகாதார நிறுவனம் வழிகாட்டி உதவும்.

"உணவுக் கலப்படம் சம்பந்தமான அனைத்து நாட்டு ஆராய்ச்சி மற்றும் எச்சரிக்கைத் திட்டங்களை உலகச் சுகாதார நிறுவனமும்—உணவு, வேளாண்மை நிறுவனமும் கூட்டாக அமைத்து நடத்தலாம்" என்றும் மாநாடு சிபாரிசு செய்தது.

மிகுவிளைச்சல் தரும் நெல் சாகுபடி

தஞ்சைமாவட்டம் முழுவதிலும் மேற்கொள்ளப்படும்

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தீவிரத் திட்டம்

கும்பகோணம், சூலை 24—

"உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தஞ்சை மாவட்டம் முழுவதையும் அதிக விளைச்சல் தரும் ரக நெல் சாகுபடியின்கீழ் கொண்டுவருவதற்கான திட்டத்தை இவ்வாண்டில் மேற்கொள்ள வேளாண்மைத் துறை எண்ணியிருக்கிறது"

என்று வேளாண்மைத் துறை கூடுதல் இயக்குநர் ஏ. வெங்கட்ராமன் தெரிவித்திருக்கிறார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:—

"தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக—இரு போக சாகுபடி பகுதிகள் இரண்டும் சேர்ந்து மொத்த சாகுபடி நில அளவு 16 இலட்சம் ஏக்கர்; இதில் 14 இலட்சம் ஏக்கர் கருணா - ஐ. ஆர்.-8 — பொன்னி— கோ. 25—ஏ டி டி. 27 போன்ற அதிக விளைச்சல் தரும் ரக நெல் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்படும்.

இம்மாவட்டத்தில் பாசன வாய்க்கால்கள்—வடிகால்களைச் சீரமைக்கும் திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப்பட்ட பிறகே இரு போக சாகுபடிப் பகுதிகளை அதிகரிக்கும் திட்டத்தை மேற்கொள்ள முடியும்.

கிணறுகள்—குழாய்க் கிணறுகள் தவிர மாவட்டத்தில் 11,000 வடிமுனை குழாய்க் கிணறுகள் வேலைசெய்து வருகின்றன.

சர்வதேச வளர்ச்சி நிறுவன உதவியுடன் இம்மாவட்டத்தில் இவ்வாண்டில் முதல் கட்டமாக 3,000 வடிமுனை குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

குறுவையில் அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்படுவதை நிலைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

குறுவை மொத்தம் 5.11 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது.

இப்பருவத்தில் 1.70 இலட்சம் ஏக்கரில், 'ஏ.டி.டி.-27' ரக நெல் சாகுபடி செய்யப்படும்; 'கருணா'வுக்கும் அதிக கிராக்கி உள்ளது.

இப்பருவத்தில், 'கருணா' 70,000 ஏக்கரில் பயிர் செய்யப்படும்; சென்ற பருவத்தில் 1 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டது.

'கருணா' சாகுபடி அதிக அளவு குறைக்கப்படுவதற்குக் காரணம் 'ஐ ஆர்.-20' என்ற மற்றொரு அதிக விளைச்சல் ரக நெல்லை 50,000 ஏக்கரில் சாகுபடி செய்ய வேண்டியிருப்பதேயாகும்.

அடுத்த கோடை பருவத்தில் இம்மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்படும்; இந்த ஆண்டு கோடையில் 7,000 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டது.

கோவில்பட்டியில் உள்ள பருத்தி ஆராய்ச்சி நிலையம், தஞ்சை மாவட்டத்துக்கு ஏற்ற அதிக விளைச்சல் தரும் குறுகிய காலப் பருத்தியைக் கண்டுபிடித்து வருகிறது; 'கெ. 1136' என்ற இந்த ரகப் பருத்தி திருச்சி மாவட்ட வயல்களில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டுள்ளது; திருச்சி மாவட்டத்துக்கு ஏற்றதாக இருப்பதாகத் தெரியவருமானால், இது தஞ்சை மாவட்டத்துக்கு விரிவுபடுத்தப்படும்.

திருச்சி மாவட்டத்தில் 'கருணா' 1-இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படும்.

மாரடைப்பு வருமுன் அறிவிக்கும் கருவி

சின்னஞ்சிறு மின் அணுக் கருவிதான் அது—இருதயத் துடிப்பினைக் கண்காணித்துக்கொண்டிருக்கும்; துடிப்புச் சீராக இல்லையேல் உடனே கதறத் துவங்கிவிடும்; இந்தக் கருவியை இப்போது அமெரிக்காவிலே இருதய நோயாளிகள் அணிந்துகொண்டு, தங்கள் அலுவல்களை வழக்கம்போல் கவனித்துவருகின்றனர்.

சிகரெட் பெட்டி அளவில் இருக்கும் இக்கருவி பார்ப்பதற்கு டிரான்சிஸ்டர் ரேடியோ போன்று இருக்கிறது; மாரடைப்பு வருவதற்கு முன்னரே அதனைக் குறித்து எச்சரிக்கும் ஆற்றல் இதற்கு உள்ளது.

கருவி எச்சரிக்கை செய்தவுடனே நோயாளி தமது மருத்துவருடன் தொலைபேசியில் பேசி—அத்தொலைபேசியின் வழியாகவே இருதயத் துடிப்பை மருத்துவருக்குத் தெரியப்படுத்தலாம்; அதனைக் கேட்டு மருத்துவரும் செய்ய வேண்டியதை நோயாளிக்குத் தெரிவிப்பார்.

மருத்துவரின் தொலைபேசியிலே நோயாளியின் இருதயத் துடிப்பு குறித்து கருவி தெரிவிக்கும் தகவலைப் பெற சிறப்புக் கருவி ஒன்றும் அவருடைய தொலைபேசியில் இணைக்கப்பட்டிருக்கும்; தேவையானால் அவர் 'கிராப்' படத்தில்கூட இருதயத் துடிப்பைப் பதிந்து எடுத்துக்கொள்ளலாம்.

மரணத்தில் முடியும் மாரடைப்பு ஏற்படுவதற்கு முன்னால் இருதயத் துடிப்பு சீராக இல்லாமல் தாறுமாறாக இருப்பது வழக்கம்; இதனை, இந்தக் கருவியின் மூலம் நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும்.

இருதயத் துடிப்பு சீராக இல்லாமல் இருப்பதை முன்னரே தெரிந்துகொள்ள முடியுமானால் மாரடைப்பு வராமல் தடுக்கச் சிகிச்சை செய்வதற்கும் போதிய நேரம் இருக்கும்; தகுந்த மருந்து கொடுத்தும் நோயாளியைக் காப்பாற்றிவிடலாம்.

மாரடைப்பினால் உலகிலே இலட்சக்கணக்கான பேர் மடிகின்றனர்; இவர்களிலே பாதிப் பேரையாவது மாரடைப்பு வரப்போவது பற்றி முன்கூட்டியே அவர்கள் உணர்ந்து சிகிச்சை பெற்றால் காப்பாற்ற முடியும்.

சென்னை 13-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

22—7—72-ல் சென்னை 13-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றத் தேர்தல், மாவட்ட அவைத் தலைவர் அ. செல்வராசன் தலைமையில்—13 வது வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் வெ. சின்னப்பன் முன்னிலையில்—கழகச் செயலாளர் பா. ஞானசிகாமணி அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விவரம்:—

அவைத் தலைவர்: ஏ. சாமிக்கண்ணு; செயலாளர்: ஏ. கணேசன்; துணைச்செயலாளர்: ஜி. தாஸ்; பொருளாளர்: பெருமாள்; செயற்குழு உறுப்பினர்கள்: எம். கணேசன், எஸ். மம்மத், எம். ஏகாம்பரம், இரா. வீரராகவன், கே. பி. கண்ணன், மாரி, அரிகிருட்டினன், ஆரோக்கியசாமி, யாலன், ஜெயரத்தினம், சி. மணி.

இந்திரா கட்சியின் சதி

தமிழ்நாட்டில் கழக அரசைக் கவிழ்க்க முயற்சி

முன்னாள் மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் வெளியிடும் தகவல்

ஊப்ளி, ஜூலை 27—

"தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் தி. மு. கழக அரசைக் கவிழ்க்க இந்திரா காங்கிரசு மேலிடமும் -- மத்திய ஆட்சியாளர்களும் மறைமுகமாக முயற்சி செய்து வருகின்றனர்"

என்று மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதல்வரும் -- மைசூர் சிண்டிகேட் காங்கிரசுத் தலைவருமான வீரேந்திர பாட்டீல் குற்றஞ் சாட்டினார்.

மைசூர் மாநிலத்தில் உள்ள ஊப்ளியில் வீரேந்திர பாட்டீலுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும் பேசுகையில் அவர் கூறியதாவது:—

"நமது நாட்டில் சனநாயகத்திற்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலை உருவாகியிருக்கிறது; இந்திரா காங்கிரசாரும் -- மத்திய ஆட்சியாளர்களும் சேர்ந்து இத்தகைய ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்!

சனநாயக நடைமுறைக்கு மாறாகச் சதித் திட்டம் வகுத்தும் -- ஏமாற்றியும் -- மாற்றுக் கட்சி அரசுகளைக் கவிழ்த்து தங்கள் ஆட்சியை நிறுவுவதில் இந்திரா காங்கிரசு ஈடுபட்டிருக்கிறது; இதற்கு மத்திய அரசும் உடந்தையாக இருக்கிறது.

இப்படிப் பல முறைகேடான வழிகளில் ஒரிசா மாநிலத்திலிருந்த மாற்றுக் கட்சி ஆட்சியைக் கவிழ்ப்பதில் வெற்றி கண்ட இந்திரா காங்கிரசார், இப்போது தமிழ்நாட்டில் சிறப்பான முறையில் ஆட்சி நடத்தி வரும் தி. மு. கழக அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இந்திரா காங்கிரசாரும் -- மத்திய ஆட்சியாளர்களும் வேண்டுமென்றே திட்டமிட்டு, ஒன்றன்பின் ஒன்றாக ஏதாவது தொல்லைகளை உருவாக்கித் தி. மு. கழக அரசுக்கு தீங்கு விளைவித்து வருகிறார்கள்.

கழக அரசை எப்படியாவது கவிழ்த்துவிடவேண்டும் -- என்பதே அவர்களது நோக்கமாக இருந்து வருகிறது!"

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 262/72

நிர்வாக அலுவலர்,
ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் கோயில்,
அம்பல், நன்னிலம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் —மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் அம்பல் கிராமம் ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரா கோயில் விஷயமாக:—

தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் அம்பல் கிராமம் ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரா கோயிலுக்குச் சொந்தமாக நன்னிலம் வட்டம் அம்பல் கிராமம் ஆர்.எஸ். எண் 165/1ஏ-யில் உள்ள ஏக்கர் 0 33 செண்ட் நிலத்தில் உள்ள 10 இலுப்பை மரங்களையும் ரூ. 420 (நானூற்று இருபது ரூபாய்) என ஏலத் தொடக்க விலையாகக்கொண்டு பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 262/72 டி. 1
நாள் 17—7—1972

மேற்படி மனு குறித்து சென்னை 34, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 31—8—1972 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 29—8—1972 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக.

1,650 அடி உயரத்தில் நீர்த் தேக்கம்

மின்சார உற்பத்தில் புதிய வழிமுறை

இலண்டன், ஜூலை 26—

நீர் மின் உற்பத்தியில் புதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்துகிறது -- பிரிட்டிஷ் மின்சார வாரியம்.

ஏரி போன்ற நிலையான நீர்த் தேக்கங்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் வழி இது.

ஏரியிலிருக்கும் தண்ணீரை அதிக உயரத்தில் கட்டப்படும் நீர்த் தேக்கத்திற்குக் குழாய் மூலம் ஏற்றி -- பிறகு அந்த உயரத்திலிருந்து மீண்டும் ஏரியிலேயே தண்ணீரை விழச்செய்து--விழும்போது அதிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதுதான் புதியமுறை.

பிரிட்டிஷ் மின்சாரத்துறை தற்போது இப்புதிய முறைப்படி ஒரு திட்டம் மேற்கொண்டுள்ளது; அதன்படி வேல்ஸ் நகரில் உள்ள ஓர் ஏரியிலிருந்து தண்ணீரை 1,650 அடி உயரத்திற்கு ஏற்ற முடிவு செய்திருக்கிறது.

அந்த உயரத்தில் ஒரு நீர்த் தேக்கம் கட்டி மின்சார மோட்டார்கள் மூலம் கீழே இருக்கும் தண்ணீரை மேலே சேர்த்து -- மீண்டும் கீழே விழச் செய்யப்போகிறார்கள்.

அவர்கள் மேற்கொள்ளும் திட்டப்படி 14 இலட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று கருதுகிறார்கள்; மின் உற்பத்தி நிலையப் பூமிக்கு அடியில் அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இத்திட்டத்தில் ஒரு பெரிய பயன் என்னவென்றால், மின்சாரம் தேவைப்படுகின்றபோது ஓரிரு நிமிடங்களில் உற்பத்தி செய்ய முடிகிறது என்பதுதான்.

நாடாளுமன்ற அங்கீகாரத்தை எதிர்பார்த்து நிற்கும் இத்திட்டத்திற்கு 7.5 மிலியன் பவுன்கள் செலவு ஆகும்; அங்கீகாரம் கிடைத்ததும், 1,650 அடி உயரத்தில் நீர்த்தேக்கம் கட்டும் வேலை தொடங்கும்; இது கட்டி முடிக்க ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்லா ஒப்பந்தம் -- நமது முதிர்ச்சியின் அறிகுறி

நீண்ட நெடுங்கால அமைதியே நமது குறிக்கோள்

ஜெர்மனியை நேச நாடுகள் அவமதித்தே இரண்டாம் உலகப் போருக்கு வித்திட்டது -- இதனை நாம் உணரவேண்டும்

ஐதராபாத், ஜூலை 27--

"சிம்லா உடன்பாட்டை மக்களில் எல்லாம் பிரிவினரும் வரவேற்றிருக்கிறார்கள்; ஆனால் சில சுயநல சக்திகள் அதன் முக்கியத்துவத்தைக் குறைக்க முயற்சிக்கின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தில் சமாதானம் ஏற்படுவதையோ -- இந்தியா வலிமையாக இருப்பதையோ சில நாடுகள் விரும்பவில்லை; இந்த நாடுகள், அண்மைய நெருக்கடியின்போது இந்தியாவுக்கு எதிராக இருந்தன; இந்த நாடுகள் நீங்கலாக இதர நாடுகள் அனைத்தும் சிம்லா உடன்பாட்டை முழுமனத்துடன் வரவேற்றுள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில் சமாதானத்தைக் குலைக்க -- ஒரு நாட்டிற்கு எதிராக மற்றொரு நாட்டைத் தூண்டிவிட வல்லரசுகள் முயற்சிக்கின்றன; சுதந்தரப் போராட்டத்தின்போது அவை இவ்வாறு முயற்சி செய்தன; இப்போது மீண்டும் அதே மாதிரி செய்யத் தொடங்கியிருக்கின்றன.

மூன்றாம் தரப்பு உதவியின்றி அல்லது போருக்குப் புறப்படாமல் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியாவும் -- பாகிஸ்தானும் இசைந்ததே சிம்லா உடன்பாட்டின் பெரும் சாதனையாகும்.

மேற்கத்திய நாடுகள்தான் போர் முறையைக் கொண்டுவந்தன; ஆனால் இந்தியாவோ, சிம்லா ஒப்பந்தத்தின் மூலம் பெரும் முதிர்ச்சியைக் காட்டியுள்ளது; எந்தப் போரையும் சமாளிக்க வல்ல உறுதி நமக்கு வேண்டும்; அதை அடைய முயன்றுவருகிறோம்.

முதல் உலகப் போரில் ஜெர்மனியை நேச நாடுகள் அவமதித்தன; இதுதான், இரண்டாவது உலகம் போருக்கு வித்து ஆகியது.

இந்தியா பலம் பொருந்தியதாக இருப்பதால், பாகிஸ்தானை அவமதிக்க முடியாது; ஜெர்மனியை நேச நாடுகள் கௌரவமாக நடத்தியிருந்தால் ஹிட்லரும் தோன்றியிருக்கமாட்டார் -- இரண்டாம் உலகப் போரும் வந்திராது; இந்தியா என்றைக்கும் சமாதான முறையையே பின்பற்றும்.

சிம்லா ஒப்பந்தத்தைக் குறுகிய நோக்குடன் பார்க்கக் கூடாது; இந்த ஆண்டில் என்ன நடக்கிறது -- அடுத்த ஆண்டில் என்ன நடக்கும் என்பதில மட்டும் அக்கறை காட்டினால் போதாது; ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் அல்லது நூறு ஆண்டுகளுக்குப் பின் என்ன நடக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும்; வருங்காலம் சமாதானத்தையே பொறுத்திருக்கிறது; இதில் சந்தேகமே வேண்டாம்.

இதனால், 'சமாதானம் நிலைக்கும்' என்று நம்பியிருக்கலாம்; அவ்வளவுதான்; இருப்பினும் நாம் மோசமான நிலைமையைச் சமாளிக்கவும் தயாராக இருக்கவேண்டும்; எந்த நாளிலும் -- எல்லாக் காலத்திலும் நாட்டின் சுதந்தரத்தைக் காக்கத் தயாராக இருக்க வேண்டும்."

-- தலைமையமைச்சர் இந்திரா காந்தி
(ஐதராபாத் பொதுக்கூட்டத்தில்)

இந்துக் கோயிலில் பிற சமயத்தவருக்கு அனுமதி

உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து மேல் நடவடிக்கை

அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் விளக்கம்

சென்னை, ஜூலை 27—

இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரும் கோவிலுக்குள் செல்லலாம் என்று தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டம் செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றம் -- மனு ஒன்றின்மீது -- தீர்ப்பு கூறியிருக்கிறது.

"இந்தத் தீர்ப்பின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?"

என்ற செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில், அறநிலையத்துறை அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"தீர்ப்பின் முழுவிவரம் இன்னும் கிடைக்கவில்லை; கிடைத்ததும் தமிழ்நாடு அரசின் சட்டத் துறை அதைப் பரிசீலனை செய்து -- தனது கருத்தைத் தெரிவிக்கும்; அந்தக் கருத்தின் மீது, 'தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வதா -- வேண்டாமா' என்பது பற்றி முதலமைச்சர் முடிவு செய்வார்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமப் பகுதிகளில் இந்த ஆண்டில் மூன்று பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்; ஒவ்வொரு முகாமிலும் 25 பெண்களுக்கு 5 நாட்கள் பயிற்சி தரப்படும்; பயிற்சி பெறுபவர்களுக்கு 'ஸ்டைபண்டு' அளிக்கப்படும்.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 263/72

ஆதீனகர்த்தர்,
தருமபுரம் ஆதீனம்
மாயூரம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் —மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம் மாயூரம் வட்டம் மற்றும் நகரம் வள்ளலார் கோயில் கிராமம் ஸ்ரீ வதன்யேஸ்வர சுவாமி கோயில் விஷயமாக:—

தஞ்சாவூர் மாவட்டம் மாயூரம் வட்டம் மற்றும் நகரம் வள்ளலார் கோயில் கிராமம் ஸ்ரீ வதன்யேஸ்வர சுவாமி கோயிலுக்குச் சொந்தமாக மாயூரம் நகரம் வள்ளலார் கோயில் கீழத் தெரு, பிளாக் எண் 17, வார்டு எண் 7, சர்வே எண் 456/2-ல் உள்ள ஒரு புளியமரத்தினை ரூ. 900 (ரூபாய் தொள்ளாயிரம் மட்டும்) வீதம் மாயூரம் டவுன் ஆனைதாண்டவபுரம் தெருவில் வசிக்கும் திரு. இராமமூர்த்தி என்பவருக்குத் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு.

நோட்டீஸ் மனு எண் 263/72 டி. 1
நாள் 17—7—1972

மேற்படி மனு குறித்து சென்னை34, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 31—8—1972 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்துமூலமாக 29—8—1972 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

இராசதந்திரிகளின் உள்ளம் பேசுகிறது

ஐ நா, ஜூலை 27—

ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவைக் கட்டிடத்தின் தாழ்வாரத்தில் ஓர் அமெரிக்க இராஜதந்திரியும் -- இரஷ்ய அதிகாரி ஒருவரும் இவ்வாறு பேசிக்கொண்டனர்.

அமெரிக்கர்:— "எகிப்திலிருந்து இரஷ்யர்களுக்குக் 'கல்தா' கொடுத்ததில மிகவும் மகிழ்ச்சி-- என் பாராட்டுக்கள்."

இரஷ்யர் (முறைப்புடன்):— "ஏன்?"

அமெரிக்கர்:— "பத்து ஆண்டுகளுக்கு முன்னால் வியட்நாமிலிருந்து அமெரிக்கர்களுக்கும் இவ்வாறு 'கலதா' கொடுத்திருந்தால் எங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தேன்-- அதனாலதான்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1973—74-ம் ஆண்டுடன் முடிவுறும் மூன்றாண்டுகளுக்கு, குடுமியான்மலையிலுள்ள அண்ணா பண்ணையில் இப்பயிர்களின் சாகுபடி குறித்து ஆராய்ச்சி நடத்துவதற்காக மாநில அரசு ரூ 1 37 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

புதுக்கோட்டை திருவரங்குளம் வெம்பன் காட்டுப் பகுதியில மிகு விளைவு தானிய உற்பத்தி ஆராய்ச்சித் திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.